**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**MC No.05/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | **நதியா** | Prosecution | P.W- 1 Chief |
| Husband Name | சுரேஷ்குமார் | Defence | |
| Village | | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 39/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

04.10.2023 சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் மனுதாரா் ஆவேன். 2ம் மனுதாரர் என்து மகள். எதிர்மனுதாரர் எனது கணவர். எனது கணவரை பிரிந்து எனது மகளை எனது பராமரிப்பில்வைத்து தனியாக வாழ்ந்து வருகிறேன் இந்த மனு ஜீவனாம்சம் கோரி எனது கணவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். எனது மகளை என்னால் தொடர்ந்து பராமரிக்க இயலவில்லை என்பதாலும், தற்போது எந்த பராமரிப்பும் இன்றி தனியாக இருந்து வருவதாலும். எதிர் மனுதாரருக்கு எதிராக நான் ஜீவனாம்சம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரம் எனக்கு நன்கு தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் மனுவில் கோரிய பரிகாரத்தை எனக்கு வழங்கியும் எதிர்மனுதாரரிடமிருந்து எனக்கு ஜீவனாமசம் வழங்க உத்தரவிட வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு கட்சிக்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

01. எனக்கு எதிர்மனுதாரருக்கும் கடந்த 25.10.2009ஆம் தேதி நடந்த திருமண அழைப்பிதழ் அசல் **ம.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

02. எனக்கு எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்த பின்னிட்டு எடுத்த குடும்ப புகைப்படம் 2ஆக குறியீடு செய்யப்படுகிறது அசல் **ம.சா.ஆ. 2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

03. எனக்கு எதிர்மனுதாரருக்கும் பிறந்த 2ம் மனுதாரர் Hasini பிரப்பு சான்றிதழ் **ம.சா.ஆ. 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது)

04. கடந்த 21.12.2023ஆம் தேதி எனது கணவர் எனக்கு அனுப்பிய வழக்கிறிஞர் அறிவிப்பு சார்பு நகல் **ம.சா.ஆ. 4ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

05. எடந்த 03.01.2024 ஆம் தேதி நான் எனது கணவரின் வழக்கிறருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ. 5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரரின் விசாரணைக்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**